www.tamilarangam.net



இது எனது இறுதிப் பிரார்த்தனை
தயவு செய்து
என் ஜீவிதத்தை
சிதைத்து போல
என் மேலான வேண்டுதலையும்
சிதைத்து விடாதே
வருவாய் என்று
என் ஆத்மா சொல்கிறது
நான் இன்னும்
நம்பிக்கை இழக்கவில்லை
பரிசுத்த நிலையில்
என் மரணத்தின் முடிவிலும்
நான் உன்னை மன்னித்து விட்டேன்
வா

இன்றோ அல்லது நாளையோ
காலப் போக்கிலோ
எனது குரல்
உனது செவிப்புலனுக்கு எட்டலாம்
அப்போதாவது
என் மரணத்தைப்பற்றி
உனது கையிலுள்ள துப்பாக்கியைப் பற்றி
உன்னைச் சுற்றி இருப்போர் பற்றி
என்னை எதிர்பார்த்து
எனக்காக ஏங்கும்
என் குழந்தைகளைப் பற்றி
என்ன நினைப்பாய் புலித் தோழனே?

தனிமையில் இரு
நடந்ததை மீட்டிப்பார்
என் உருவத்தை
உன் மனக்கண்முன் கொண்டுவா
உன் காதை
உன் பார்வையை
என் வீட்டுப்பக்கம் திருப்பு
என் குழந்தைகளின் அழுகை
எனது சுற்றத்தின் சோகம்
இவை உனது
மனசாட்சியைத் தொடவில்லையா?
கண்களை ஈரமாக்கவில்லையா?
இப்போது என்ன நினைக்கிறாய்?
எனது குழந்தைகளுக்கு



என் சொந்தங்களுக்கு
என் சமூகத்திற்கு
நீ என்ன செய்ய நினைக்கிறாய்?

நண்பனே
நானுன்னை மன்னித்து விட்டேன்
நீ நேராக வா
எப்போதும்
என் வீட்டுக்கதவுகள் சாத்தப்பட்டிருப்பதில்லை

அழுது கொண்டிருக்கும்
என் குழந்தைகளைப் பார்
தலையைத் தடவு
ஆறுதல் கூறு
அது கூட உனக்கு சம்மதமில்லையா?
என்றாலும் நண்பனே
நானுன்னை மன்னித்து விடுகிறேன்
உண்மையாகவே மன்னித்து விடுகிறேன்

என் மண்ணறையைத் தேடி
என் குழந்தைகளைத் தேடி
என் சொந்தங்களைத் தேடி
நீ வராவிட்டாலும் நண்பனே
உனது விழித்திரைகள்
மூடிக்கொள்ளும்
ஒவ்வோர் இரவின் கனவிலும்
நான்

உன்னைத் தேடி வருவேன்
மனம் விட்டுப் பேசுவேன்
உன்னை மன்னித்தாய்க் கூறுவேன்

தோழமைகளுடன்
அ. பஞ்சலிங்கம்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்

---

என் சுவாசத்தைத் திருடிய அந்தப்புலி நண்பனை உங்களில் எவரேனும் சந்திக்க நேர்ந்தால் அவர் கரத்திற்கு இதனைசமர்ப்பித்து விடுங்கள்.



# என் சுவாசத்தை திருடிய புலிகளுக்கு

நண்பனே
துப்பாக்கி ரவையால்
என் தலையைத் துளைத்த புலித் தோழனே
நான்
உன்னை மன்னித்து விடுகிறேன்

எனது மனைவியும்
எனது செல்வங்களிரண்டும்
எனது தாயும் தகப்பனும்
எனது உறவுகளும்
உன்னைத் திட்டலாம்

எனது சமூகமும்
நான் நேசிக்கும்
எனது மக்களும்
எனது சக ஊழியர்களும்
உன்னைத் தூற்றலாம்

ஆனாலும் புலி நண்பனே
நான் உன்னை மன்னித்து விடுகிறேன்
உண்மையாகவே
நான் உன்னை மன்னித்து விடுகிறேன்

'அப்பா கொழும்பு போயிருக்கிறார்
வரும்வரைக் காத்திருக்கிறேன்' என்று
வெள்ளையுடுத்த மனைவியிடம்
என் பிள்ளை சொல்கிறான்

என்னையிழந்து
ஏழைகளெல்லாம்
கதறி அழுகிறார்
நான்
திரும்பி வர வேண்டுமென்று
விரும்பி நிற்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணாமல் போன [illegible]
எனது
விலாசத்தை
விசாரித்துக் கொண்டிருக்கும்
இவர்களைக் கண்டு
நான் கொஞ்சம் பேச விரும்புகிறேன்

ஆகவே புலி நண்பனே
என் தலையில்
ரவைகளைப் பீச்சிய
உன் துப்பாக்கியிடம் கேட்டுச் சொல்

எனது உயிரை
ஒரு கணம்
திரும்பத் தரலாமா என்று

எனது மரணத்தைக் கண்டு
நீ புளகித்ததாயும்
எனது ரத்தத்தைக் கண்டு
நீ சப்தித்ததாயும்
இங்கே
பேசிக்கொள்கிறார்கள்
ஆனாலும் புலி நண்பனே
நானுன்னை மன்னித்து விடுகிறேன்
இறப்பு
மனிதனின் பிறப்புரிமையல்லவா!
அதனால் நானுன்னை
மன்னித்து விடுகிறேன்

என் அன்பிற்குரிய சோதரனே
என்னை உனக்குத் தெரியும்
எனது கண்ணாடியும்
எனது காற்சட்டையும்
எனது சேட்டும் செருப்பும்
எனது சிரிப்பும் விருப்பும்
எனது முகமும் முதிர்வும்
ஈரமுள்ள எனது ஹிருதயமும் கூட
உனக்குத் தெரியும்

அஹிம்சையை மட்டுமே
அர்த்தமுள்ளதாக்கிக் கொண்ட
எனது நடப்பும்
எனது நட்பும் கூட
உனக்கு நன்றாகத் தெரியும்

ஆனாலும் —
உனது ஹிம்சைக்குள் நான்
வஞ்சிக்கப்பட்ட காரணம் மட்டும்
எனக்குத் தெரியாது
உண்மையாகவே எனக்குத் தெரியாது

எந்த நியாயங்களுக்காய்
நீ என்னை காயப்படுத்தினாய்?
என்ன காரணங்களுக்காய்
நீ என்னை வேரறுத்தாய்?

சொல்............
உன்னை
உனது தாயை
உனது தகப்பனை
உனது உடன்பிறப்புகளை உறவுகளை
நான்
உளம் நோகச் செய்தேனா?

ஈழ தேசத்திற்கான
உனது போராட்டத்தை
நான்
நாசப்படுத்தினேனா?

உனக்கு சேரவேண்டிய
ஒரு கவளம் உணவு
சில லீற்றர் தண்ணீர்
ஆடையணி
இவற்றிலெதையேனும்
நான் தட்டிப் பறித்தேனா?

இல்லை நானுன்னை
மானபங்கம் செய்தேனா?
இல்லையே................
இருந்தாலும் நண்பனே
நானுன்னை
மன்னித்து விடுகிறேன்

எனது தலைக்கு நீ
இலக்கு வைக்கும் போது
எனது ரத்தம்
இந்த மண்ணில் சிந்தியபோது
எனது உடலம்
இந்த நிலத்தில் சாய்ந்த போது
என்னை வீழ்த்தி விட்ட
களிப்பில் நீ குதூகலித்த போது
என்ன நினைத்தாய்?
நண்பா
நீ என்னைப்பற்றி
என்ன நினைத்தாய்?

ஓர் எதிரியை அழித்ததாய் நினைத்தாயா?
ஒரு திருடனை ஒழித்ததாய் நினைத்தாயா?
என்ன நினைத்தாய்?

எனது உயிரிலும் பெரிய புலி நண்பனே
பிரிய சகோதரனே
நான் உன்னை மன்னித்து விடுகிறேன்
உண்மையாகவே
நானுன்னை மன்னித்து விடுகிறேன்

நண்பனே
என் ஆத்மாவிற்காக
என் வேண்டுதலுக்காக
நீ என்னைத் தேடி வா
மௌனம் புதைந்த
என் மண்ணறைக்குள்
உன்னை மன்னித்தவனாக
நான் காத்திருக்கிறேன்

வா
உன்னிடமிருந்தும்
உன் தோழர்களிடமிருந்தும்
வாத்ஸல்யமான
மனித நேயத்தை
நான் எதிர்பார்க்கிறேன்
வா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்